www.Padasalai.Net www.CBSEtips.in
www.vskteaches.xyz YouTube - @vskteaches

# காலாண்டு பொதுத்தேர்வு - 2023

Reg.No. :

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 100

அறிவுரை : 1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்புகள் : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"
   - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
3. உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்
   அ) தேவநேயப்பாவாணர் ஆ) தமிழழகனார் இ) பாரதியார் ஈ) பெருஞ்சித்திரனார்
4. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
5. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்கு "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது ________.
   அ) நேர் விடை ஆ) ஏவல் விடை இ) உறுவது கூறல் ஈ) இனமொழி விடை
6. காசி காண்டம் என்பது ________.
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
   ஆ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
   இ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் ________.
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
8. இடைக்காடனார் பாடலை இகழ்ந்தவர் ________. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ________.
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
   இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
9. மருத நிலத்திற்குரிய சிறுபொழுது ________.
   அ) வைகறை ஆ) எற்பாடு இ) மாலை ஈ) நண்பகல்
10. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
    அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
    இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
11. மார்கழித்திங்கள் - இத்தொடரில் அமைந்துள்ள தொகையை தேர்வுசெய்க.
    அ) அன்மொழித் தொகை ஆ) உவமைத் தொகை
    இ) பண்புத் தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.vskteaches.xyz www.Padasalai.Net www.CBSEtips.in YouTube - @vskteaches

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

12. குண்டலமும் குழைகாதும் - இலக்கணக்குறிப்புத் தருக.
அ) உம்மைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) வேற்றுமைத் தொகை ஈ) பண்புத் தொகை

13. இப்பாடல் இடம்பெற்ற நூல் ________.
அ) நீதிவெண்பா அ) பரிபாடல்
இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஈ) பரிபாடல்

14. செங்கீரை - பிரித்துஎழுதுக.
அ) செங் + கீரை ஆ) செம்மை + கீரை இ) செம்பு + கீரை ஈ) செம் + கீரை

15. இப்பாடலின் ஆசிரியர் ________.
அ) குமரகுருபரர் ஆ) பாரதிதாசன்
இ) கீரந்தையார் ஈ) குலசேகராழ்வார்

பகுதி - II (மதிப்பெண் : 18)

பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4 x 2 = 8**
**21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. பூவின் தோற்ற நிலை மற்றும் பூவின் வாடிய நிலை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
17. விடைகளுக்கேற்ற வினா அமைக்க :
அ) "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்கிறார் பாரதியார்.
ஆ) உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே ஆகும்.
18. வசனகவிதை - குறிப்பு வரைக.
19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
20. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித்தண்டுகள் - இக்கவிதையின் உள்ளுறை எழுதுக.
21. முயற்சி - எனத் தொடங்கும் குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 x 2 = 10**

22. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
அ) உழவர்கள் மலையில் உழுதனர்.
ஆ) முல்லைப் பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
23. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. கலைச்சொல் தருக : அ) Discussion ஆ) Myth
25. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
ஆ) கல்வியே ஒருவற்கு உயர்வு தரும்.

*குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.*
சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

26. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
i) நேற்று என்னைச் சந்தித்தார். என் நண்பர்.
ii) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
27. சொல்லைக் கண்டுபிடித்து புதிரை விடுவிக்க.
i) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்
ii) நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
28. அன்பின் ஐந்திணைகள் யாவை?

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.vskteaches.xyz
www.CBSEtips.in YouTube - @vskteaches

## பகுதி - III (மதிப்பெண்கள் 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***
நான் உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றேன். தாவரங்களின் ஒளிச்சேர்க்கையை உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன். விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தாவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து, புவியின் உயிர்ச்சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகின்றேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.

***வினாக்கள் :***

1. உணவு உற்பத்திக்கு காற்று எவ்வாறு உதவுகிறது?
2. உயிர்ச்சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க செய்யும் பணி யாது?
3. இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 x 3 = 6

**34ஆவது வினா கட்டாய வினா**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணமாகப் பாவலரேறு கூறுவன யாவை?

33. மாளாத காதல் நோயாளன் போல் - எனும் தொடரிலுள்ள உவமையை விளக்குக.

34. அருளைப் பெருக்கி .......... எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக. ***(அல்லது)***
தண்டலை மயில்களாட ....... எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

35. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் - இக்குறட்பாவை அலகிடுக.

36. கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு ! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37. வஞ்சப்புகழ்ச்சி அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 x 5 = 25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை எழுதுக.

***(அல்லது)***

ஆ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சை ஒன்றை எழுதுக.

39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

***(அல்லது)***

ஆ) திறன்பேசி நன்மை தீமை குறித்து உன் தங்கைக்குக் கடிதம் எழுதுக.

Question and answer for other district's all subject avillable in our chennal.
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

40. காட்சியை கண்டு கவினுற எழுதுக.



41. கம்பர் தெரு, இல்லம் எண் 41 இல் வசிக்கும் வினோத் என்பவர் சதுரங்க விளையாட்டுப் பயிற்சிக்குத் தன் அப்பா இராஜாவுடன் தேனி விளையாட்டு ஆணையத்தின் உறுப்பினராகச் சேர்வதாகக் கருதி விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) *மொழிபெயர்க்க :*

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas. *(அல்லது)*

ஆ) இன்சொற்கள் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.

குறிப்பு : **செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மேற்கு என்பதற்கு குடக்கு என்னும் பெயருண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடைக்காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது? ii) ஊதைக்காற்று என்று அழைப்பதேன்?
iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன? iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?
v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினைத் தருக.

**பகுதி - V (மதிப்பெண்கள் 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. *(அல்லது)*

ஆ) தமிழ் மொழியின் தொன்மை, இலக்கிய வளம், சொல்வளம் குறித்து ஒரு பக்க அளவில் எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விளக்குக.

*(அல்லது)*

ஆ) "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" - என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) "சான்றோர் வளர்த்த தமிழ்" - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. *(அல்லது)*

ஆ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

******